**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**
**ந.க.எண்.2688/ஆ5/2024, நாள்.15/07/2025**

•••••

பொருள் பள்ளிக் கல்வி – புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் விருது (Inspire Award) – 2023–2024 மற்றும் 2024–2025ம் ஆண்டிற்கான மாவட்ட அறிவியல் கண்காட்சி (District Level Exhibition and Project Competition) – இணைய வழியில் நடத்துதல் – தொடர்பாக.

பார்வை

1. சென்னை, தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மைய செயல் இயக்குநரின் கடித எண்.3447/P1/2024, நாள். 09.07.2025
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள். 17.06.2025

•••••

பார்வை 1–ல் காணும் கடிதத்தில், 2023–2024 மற்றும் 2024–2025ம் ஆண்டுக்கான புத்தாக்க அறிவியல் மானக் விருது (Inspire Manak Award) மாவட்ட அளவிலான கண்காட்சிகள் (District Level Exhibition and Project Competition DLEPC) இணைய வழியில் நடைபெற உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அளவிலான கண்காட்சிகளை இணைய வழியில் நடத்த தனிப்பட்ட கணினி அல்லது கைபேசி மென்பொருள் இப்பயன்பாட்டிற்காக உருவாக்கப்பட்டுள்ளது. MANAK Competition APP என்ற இதனை Google Play Store மூலம் பதிவிறக்கிக் கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

புத்தாக்க அறிவியல் ஆய்வு விருதுக்கு 2023–2024 மற்றும் 2024–2025ஆம் ஆண்டுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் மட்டுமே தங்களது அறிவியல் காட்சிப்பொருள் குறித்த விவரங்களை அனுப்ப வேண்டும். அவர்களது விருதுக்கான குறியீட்டு எண் (Award Code Number – எ.டு. 23TN4707174) ஒவ்வொரு மாணவருக்கான User ID ஆகும். இந்த எண்ணைப் பதிவிட்டு Get Password என்பதை அழுத்தினால் அவர்கள் முன்னரே பதிவு செய்துள்ள கைப்பேசி எண்ணுக்கு OTP வாயிலாக கடவுச்சொல் (Password) அனுப்பப்படும்.

இதற்கான வழிமுறைகள் www.youtube.com/watch?v=vlleWTYBe8O என்ற காணொலி இணைப்பில் வழங்கப்பட்டுள்ளன. இணைப்பில் குறிப்பிட்டுள்ளபடி மாவட்ட அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் தங்களுடைய அறிவியல் செயல்முறைகளை ஒளி, ஒலி காட்சிகள் மூலம் தயாரித்து கைப்பேசி அல்லது இணையதளம் மூலமாக அனுப்ப வேண்டும். சுருக்கமாக ஆயிரம் வார்த்தைகளுக்கு மிகாத சுருக்கக் குறிப்பையும் இணைக்க வேண்டும்.

பதிவேற்றம் செய்யும் வாய்ப்பு 31.07.2025 வரை மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. அதன்பின் இணையம் பதிவுகளை ஏற்காது.

2023-2024 மற்றும் 2024-2025ஆம் ஆண்டிற்கான புத்தாக்க அறிவியல் ஆய்வு விருதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளி மாணவர்களின் பெயர் பட்டியல் பார்வை 2-ல் காணும் கடிதப்படி இவ்வலுவலக இணையதளம் வாயிலாகவும் சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்டுள்ளவாறு, தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் தங்களுடைய செயல்முறைகளை குறிப்பிட்ட தேதிக்குள் பதிவு செய்வதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு -

1. 2023-2024 தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் பெயர் பட்டியல்
2. 2024-2025 தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் பெயர் பட்டியல்

15-07-25 முதன்மைக் கல்வி அலுவலர் (பொ)
வேலூர்.

பெறுநர்
சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்.
வேலூர் மாவட்டம்.

நகல்-

1. செயல் இயக்குநர் (முகூபொ),
   தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம்
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்)
   வேலூர் மாவட்டம்.
   (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)